# அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயில், திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி–620 005.

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (முதல் அழைப்பு)
## முன் தகுதி விண்ணப்பம் மற்றும் விலைப்புள்ளி கோரும் ஒப்பந்த வகை (இரு உறை முறை)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரங்கம் வட்டம், திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில் கீழ்க்கண்ட பணிக்கு அரசு அங்கீகாரம் பெற்ற முன் அனுபவம் உள்ள முதல் வகுப்பு பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இருமுடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நாளது 27.03.2018 ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது. தகுதி சான்றிதழ், ஒப்பந்தபதிவு மற்றும் பதிவு நடப்பு சான்றிதழ், விற்பனை வரி நிலுவையின்மை ஆகியவைகளும் வேலை இனங்களுக்கான விலைப்புள்ளிகளை பூர்த்தி செய்தும் கொடுக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 3.30 மணிக்கு வருகையிலுள்ள ஒப்பந்தக்காரர்கள், இத்துறை உதவிசெயற்பொறியாளர் , உதவிஆணையர்/ நிர்வாக அதிகாரி மற்றும் இலாகா அதிகாரிகள் முன்னிலையில் திறந்து முடிவு செய்யப்படும்.

இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 26.02.2018 ம் தேதி முதல் 26.03.2018 ம் தேதி முடிய அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். முன் வைப்புத்தொகைக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கி வரைவோலை அல்லது பணம் மூலம் செலுத்த வேண்டும் .

| வ. எண் | வேலை விபரம் | வேலையின் மதிப்பு | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை ரூ. | விற்பனை வரி ரூ. | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | **திருச்சிராப்பள்ளி மாவட்ட உலோக திருமேனி பாதுகாப்பு மையம் புதியதாக கட்டும் பணிகள்** | ரூ.1,16,55,000/– | ரூ.68275/– | ரூ.15000/– | 750/– | 12 மாத காலம் |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் அரசு அங்கீகாரம் பெற்ற முன் அனுபவம் உள்ள முதல் வகுப்பு பொதுப்பணித்துறை ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.

2. ஒப்பந்தப்புள்ளிகளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் போது அரசு அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர் சான்றிதழ் மற்றும் நடப்பு சான்றிதழை இணைக்க வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்கும் போது பொறுப்புறுதித் தொகையாக ரூ.68,275/– ரொக்கமாக அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்று இணைக்க வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி படிவம் 27.02.2018 ம் தேதி முதல் 26.03.2018 தேதி முடிய அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி முடிய பெற்றுக்கொள்ளலாம்.

5. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை ரூ.15000/–அதற்கான விற்பனை வரி ரூ.750/–ஆகக்கூடுதல் ரூ.15750/–ஐ அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளலாம். மேலும் இணையதளத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்ற ஒப்பந்தக்காரர் கொடுக்கும் ஒப்பந்தப்புள்ளியுடன் ரூ.15750/–க்கு தொகையை திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் பலவகை ரசீது பெற்று இணைக்கப்பட வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கு செலுத்தப்பட்ட தொகையை எக்காரணம் கொண்டும் திருப்பித்தரபடமாட்டாது.

7. பணியினை ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்த நாளிலிருந்து 12 (பன்னிரண்டு) மாதங்களில் முடித்துத்தரவேண்டும்.

8. மேற்படி குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட வேலை முன்னேற்றம் காட்டாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும்.

9. ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் காட்டாமல் தள்ளுபடி செய்யவோ, ஒத்தி வைக்கவோ திருக்கோயில் செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு.

10. ஒப்பந்தப்புள்ளியை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை 1959 ம் ஆண்டு சட்ட விதிகளுக்குட்பட்டு அங்கீகாரம் செய்யப்படும்.

11. பணிகள் யாவும் விரிவான தரப்படுத்தப்பட்ட விபரக்குறிப்பின்படி (டி.என்.டி.எஸ்.எஸ்) மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படி இருக்க வேண்டும்.

13. பணிகள் யாவும் திருக்கோயில் அதிகாரிகள், உதவிசெயற்பொறியாளர் மற்றும் உதவிப்பொறியாளர் ஆகியோர்களால் நேரடியாக மேற்பார்வையிடும் போதும் மற்றும் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரை குறிப்பின்படியும் பணிகள் மேற்கொள்ளவேண்டும்.

14. பணிகள் செய்யப்படும் அளவுக்கு அவ்வப்போது செய்து முடிக்கப்பட்ட பணியினை அளவீடு செய்து அதற்கான தொகை வழங்கப்படும்.

15. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரால் பணிகள் செய்து வருவதில் திருக்கோயில் அதிகாரிகளுக்கு திருப்தியளிக்காமல் போனால் உடன் பணியினை எவ்வித நிலையிலும் நிறுத்தவோ ஒப்பந்தத்தை ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

16. பணிக்கான உத்தரவு கிடைக்கப்பெற்ற ஒப்பந்தக்காரர் ரூ.100/– மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் திருக்கோயில் வாசகப்படி உடன்படிக்கை பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும்.

17. பணி உத்தரவு கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் பணியினை ஆரம்பிக்காவிட்டாலும் மற்றும் ஒப்பந்தப்பத்திரத்தில் கையொப்பம் இடாவிட்டாலும் ஒப்பந்தக்காரர் செலுத்திய பொறுப்புறுதித் தொகையை பறிமுதல் செய்யப்படும்.

18. வேலைகளுக்கு வருமான வரி மற்றும் C.G.S.T மற்றும் S.G.S.T செலுத்த வேண்டும்.

19. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

பி.ராணி
தக்கார்/உதவி ஆணையர்

கோ.ஜெயப்பிரியா
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

நாள் : 26.02.2018
இடம் : திருவானைக்காவல்